

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி, கெருகம்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை பயனாளிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு துணைத்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

### நெல்லை களக்காடு நகராட்சி, 7 பேரூராட்சிகளுக்கு

# ரூ.423.13 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் !

## சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு ஆய்வு!

நெல்லை, ஜூலை 24-

நெல்லை மாவட்டம் களக்காடு மற்றும் 7 பேரூராட்சிகளுக்கான ரூபாய் 423.13 கோடி மதிப்பில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் பணிகள் குறித்து சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

இது தொடர்பான திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து நெல்லை மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி அலுவலகத்தில் (22.07.2025) அன்று ரூ.423.13 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் களக்காடு நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளுக்கான தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டப்பணிகளின் ஆய்வு கூட்டம் சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வள்ளியூர், திசையன்விளை, பணகுடி ஆகிய பேரூராட்சி தலைவர்கள்,வார்டு உறுப்பினர்கள்,குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டத்திலுள்ள நான்குநேரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட களக்காடு நகராட்சி மற்றும் நான்குநேரி,ஏர்வாடி, மூலக்கரைப்பட்டி, திருக்குறுங்குடி, பேரூராட்சிகள் மற்றும் இராதாபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட,வடக்கு வள்ளியூர், திசையன்விளை, பணகுடி ஆகிய 7 பேரூராட்சிகளுக்கு ரூபாய். 423.13 கோடிக்கு தாமிரபரணி நதியை நீராதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது.

எதிர்காலத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் என்பதை கருத்தில் கொண்டு இத்திட்டத்தில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டு மக்கள் தொகையானது அடிப்படை வருடம் 2037ல் 1,79,320, இடைக் கால வருடம் 2037ல் 2,10,090 மற்றும் உச்சகட்ட வருடம் 2052ல் 2,44,760 எனவும் கொள்ளப்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தாமிரபரணி நதியில்,சேரன்மகாதேவி அருகில் அமைக்கப்பட்டுள்ள 8.00 மி.மீ விட்டமுள்ள கிணற்றிலிருந்து நதி நீர் எடுக்கப்பட்டு அங்கிருந்து 9.06 கி.மீ தொலைவிலுள்ள கங்கனாங்குளம் அருகிலுள்ள,திருவிருந்தாள் புளி கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நீர் 31.67 MLD சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்திகரிக்கப்பட்டு மின் மோட்டார்கள் மூலம் ஊந்தப்பட்டு, பின் நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளில் அமையவுள்ள தரைமட்ட குடிநீர் சேகரிப்பு தொட்டிகள் மூலம் சேமிக்கப்பட்டு, பின் நகராட்சி மற்றும் 7 பேரூராட்சிகளில் ஏற்கனவே அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகள் -38 எண்ணம் மற்றும் புதிய மேல் நிலைத் தொட்டிகள் -24 எண்ணம் வாயிலாக புதிதாக பதிக்கப்படவுள்ள பகிர்மான குழாய்கள் 521.68 கி.மீ மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப் படவுள்ளது. இக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் 49417 வீடுகளுக்கு புதிதாக குடிநீர் இணைப்புகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தற்போது வரை 75 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, இத்திட்டமானது 11 / 2025 -யில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரதிட்டமிடப்பட்டுள்ளது. குடிநீர் திட்ட பணிகளுக்கு வள்ளியூர் திசையன்விளை பணகுடி ஆகிய பேரூராட்சி தலைவர்கள்,வார்டு உறுப்பினர்கள், முழு ஒத்துழைப்புடன் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து குடிநீர் திட்டப்பணிகளை விரைவாக முடிக்க ஒத்துழைப்பு நல்க வேண்டும். இவ்வாறு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) வில்லியம் ஜேசுதாஸ், தலைமை பொறியாளர் கணேசன், நிர்வாகப் பொறியாளர் தயாளன் மோசஸ், உதவி நிர்வாகப் பொறியாளர் பாக்கியராஜ், ஆசிக், திட்ட மேற்பார்வையாளர் விஜயகுமார், பேரூராட்சி தலைவர்கள் ராதாகிருஷ்ணன் (வள்ளியூர்) தனலெட்சுமி தமிழ்வாணன் (பணகுடி) துணைத் தலைவர்கள் கண்ணன் (வள்ளியூர்) புஷ்பராஜ் (பணக்குடி) மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாந்தி சுயம்பு உட்பட அரசு அலுவலர்கள், பேரூராட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

## மாநில நிர்வாகிகள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் பயிற்சிக் கூட்டம்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள், மண்டல பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ((DLC)), சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் (CLC) ஆலோசனைக் கூட்டம் வருகிற 26-07-2025 சனிக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மேற்கூறிய பொறுப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில், எனது தலைமையில், சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மண்டலப் பொறுப்பாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ((DLC)), சட்டமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ((CLC)) அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப் பயிற்சிக் கூட்டத்தில் வருகைப் பதிவேடு வைக்கப்பட இருப்பதால் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 14.07.2025

என்.ஆர்.இளங்கோ எம்.பி.
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை



ஓரணியில் தமிழ்நாடு என்ற மக்கள் இயக்கத்தின்கீழ் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி கிழக்கு – மேற்கு ஆகிய ஒன்றியங்களில் புதிய உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி நடைபெற்றது இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் உறுப்பினர் சேர்க்கை மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி தொகுதி பார்வையாளர் வீ.கவிகணேசன், மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன், ஒன்றிய செயலாளர்கள் மு.மணிமாலன், ந.பரிமளம், வெ.அன்புவாணன், கே.வி.உமா மகேஸ்வரி, பா.செ. குணசேகரன், சுப்பிரமணி, வெங்கடாசலபதி மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–4,33,50 ஆகிய வார்டுகளுக்கு மேற்கு தாம்பரம்,ராஜகோபால் திருமண மண்டபதில் 23.07.2025 அன்று உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது இதில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்.எஸ்.ஆர்.ராஜா, மேயர் க.வசந்தகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு, மக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு முறையாக பதிவு செய்யப்படுவதைப் பார்வையிட்டு, நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில், மண்டலக்குழு தலைவர் டி.காமராஜ், செ.சுரேஷ் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி மண்டலம் 2ல் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் மாநகர மேயர் ஜி.உதயகுமார் மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் பகுதி கழக செயலாளர் பேபி சேகர் மாவட்ட துணை செயலாளர் எஸ். ஜெயபாலன் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி

# 148வது வட்டம் - நெற்குன்றத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜூலை 24-

சென்னை மாவட்டம், மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-148, நெற்குன்றம், என்.டி. படேல் சாலை, ஜி.எம். மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் நேற்று (23.07.2025) காலை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு பார்வையிட்டு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்மந்தப்பட்ட துறையினரிடம் உரிய முறையில் பரிசீலனை செய்து சேவைகளை பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், தலைமை செயற் குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், தலைமை பொது குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், தி. சார்லஸ், ஆ.செல்வம், மாமன்ற உறுப்பினர்கள் வி.வி.கிரிதரன் எம்.சி., செல்விரமேஷ் எம்.சி., மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தாம்பரம் - பெங்களூர் இடையே 3 புதிய பேருந்துகள்!

## காஞ்சிபுரத்தில் – சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், ஜூலை 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில், காஞ்சிபுரம் தாம்பரம் பெங்களூரு ஆகிய வழித்தடங்களில் பயணிக்கும் மூன்று புதிய குளிர்சாதனப் பேருந்துகளை, காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், பகுதிக் கழக செயலாளர் கே. திலகர், எஸ்.சந்துரு, கழக நிர்வாகிகள் மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், ஜி. குமரேசன், பி.எஸ்.குடியரசு, எம்.எஸ்.பாலன், போக்குவரத்துத் துறை அலுவலர்கள் பொது மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, துணை மேலாளர் ஸ்ரீதர், இணைமேலாளர் (வணிகம்) தட்சிணாமூர்த்தி, காஞ்சிபுரம் கிளை மேலாளர் சீனிவாசன், தொ.மு.ச. நிர்வாகிகள் பொதுச் செயலாளர் ரவி, தலைவர் சுதாகர், பொருளார் முரளி, துணைத் தலைவர் டில்லி பாபு, மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி ஆர்.கேபேட்டை ஒன்றியம் ராகவா நாயுடு குப்பம் ஊராட்சியில் AGAMT திட்டத்தில் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற கட்டிடத்தை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் சி. என். சண்முகம், பா. சம்பத், நிர்வாகிகள் செங்குட்டவன், சரவணன், வி.ஜி. மோகன், ரோஸ் முருகதாஸ், ராமசாமி, பி.கே. சீனிவாசன், மணி, ஜெய்சங்கர், உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

**ஜூலை 24 (2014)**



திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.

உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**